செ.வெ.எண்.192/2009(செமதொஅ) நாள் : 03.07.2009.

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**(தமிழக அரசு நிறுவனம்)**
**சென்னை 600 020.**

**செய்திக் குறிப்பு**

அண்மையில் புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சுகாதார அதிகாரிகளால், சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் 60க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகளுக்கு கன்சல்டன்ட் மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மிகப் பெருமளவில் தேவைப்படுவதாகவும் நேர்முகத் தேர்வு ஜீலை மூன்றாவது வாரத்தில் கொச்சினில் நடைபெற உள்ளதாகவும் கூறப்பட்டது.

எனவே உரிய கல்வித்தகுதியும், இரண்டு வருடங்களுக்கு மேல் பணி அனுபவம் பெற்று 55 வயதிற்குட்பட்ட அனைத்து துறைகளைச் சார்ந்த கன்சல்டன்ட்/சிறப்பு மருத்துவர்கள்/அறுவை சிகிச்சை மருத்துவர்களும், நியூராலஜி, பிசிகல் மெடிசன், காது மூக்கு தொண்டை நிபுணர்கள், கண் மருத்துவர்கள், மகளிர் மகப்பேறு மருத்துவர்கள், பாதாலஜி, குழந்தை நல மருத்துவர்கள், எலும்பு தொடர்பான மருத்துவர்கள், நரம்பு மற்றும் சைகியாடிரிக் மருத்துவர்கள், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், நரம்பு அறுவைச் சிகிச்சை, இதய மருத்துவம், நியூனடோலஜி, ரேடியாலஜி, பிராஸ்தோடோன்டிஸ்ட், பொது மருத்துவம், குழந்தைகள் நல அறுவைச் சிகிச்சை, ரேடியோ டயாக்னசிஸ், அவசர சிகிச்சை மருத்துவம், மயக்க மருத்துவம், கிளினிகல் பாதாலஜி, ஹேமடாலஜி மருத்துவம், பயோ கெமிஸ்டிரி, ஹிஸ்டோபேதாலஜி, என்ஐசியூ வாஸ்குலர் சர்ஜரி, ஆன்காலஜி, பேமிலி மெடிசன், பல் மருத்துவத்தில் மேக்சில்லோபேசியல் சர்ஜரி, என்டோடோன்டிஸ்ட் மற்றும் ஆடியாலஜிஸ்ட் போன்ற துறைகளில் அனுபவம் பெற்ற மருத்துவர்களும், எம்பிபிஎஸ் பொது மருத்துவர்களும், எம்எஸ்சி, பிஎஸ்சி மற்றும் இரண்டு வருட டிப்ளமோ பெற்று 45 வயதிற்குட்பட்ட குழந்தை நல தீவிர சிகிச்சை பிரிவு, நெப்ராலஜி, ஸ்பெசலிஸ்ட் நர்சிங் மற்றும் மிட்ஒய்ப்ரி பெண் செவிலியர்களும் மற்றும் இரண்டு வருட பட்டம்/டிப்ளமோ பெற்ற மருத்துவ சார்ந்த மகளிர் டெக்னிசியன்களான OT, எக்ஸ்ரே, லேப், அனெஸ்தீசியா, பிசியோதெரபி ஸ்பெசலிஸ்ட் போன்றவர்கள் தங்களின் கல்வி, அனுபவம் மற்றும் பாஸ்போர்ட் நகல்களை பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் எண்.48, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையாறு, சென்னை 600 020 என்ற முகவரியிலுள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கோ அல்லது ஈமெயில் overnci மூலமாக 07.07.2009க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்கள் அறிய 24464263/69 என்ற தொலைபேசியிலும் எனும் இணையதளத்திலும் அறியலாம். தமிழக அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. தகுதிக்குட்பட்ட மருத்துவர்களுக்கு மட்டும் நேர்முகத் தேர்விற்கான கடிதம் அனுப்பப்படும்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**